


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.1.2026) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் சார்பில் இரண்டு நாட்கள் நடத்தப்படும் ”Umagine TN 2026” தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டில், தமிழ்நாடு ஆழ்நிலைத் தொழில்நுட்பப் புத்தொழில் நிறுவனக் கொள்கை 2025–26 யை (Tamil Nadu Deep Tech Startup Policy 2025–26) வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே.பி.கார்த்திகேயன், மின்னாளுமை இயக்குநர் / தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் தலைமை நிருவாக அலுவலர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) மரு.இரா.வைத்திநாதன், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இயக்குநர் (பொறுப்பு) கோமகன், மெட்டா இந்தியா நிறுவனத்தின் இந்தியத் தலைவர் அருண் ஸ்ரீனிவாஸ், CII தமிழ்நாடு தலைவர் உன்னிகிருஷ்ணன், எழுத்தாளர், கவிஞர் மற்றும் ஆராய்ச்சியாளர் மதன்கார்க்கி, பல்வேறு நாடுகளின் தூதரக அதிகாரிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (8.1.2026) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் சார்பில் இரண்டு நாட்கள் நடத்தப்படும் ”Umagine TN 2026 , EROS Gen AI, Better Compute Works Inc, Phantom Digital Effects Limited, Rewin Health, Cube84, WeLoadin Studio LLP ஆகிய நிறுவனங்களுடன் தொழில் முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே.பி.கார்த்திகேயன், மின்னாளுமை இயக்குநர் / தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் தலைமை நிருவாக அலுவலர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) மரு.இரா.வைத்திநாதன், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இயக்குநர் (பொறுப்பு) கோமகன், மெட்டா இந்தியா நிறுவனத்தின் இந்தியத் தலைவர் அருண் ஸ்ரீனிவாஸ், CII தமிழ்நாடு தலைவர் உன்னிகிருஷ்ணன், எழுத்தாளர், கவிஞர் மற்றும் ஆராய்ச்சியாளர் மதன்கார்க்கி, பல்வேறு நாடுகளின் தூதரக அதிகாரிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (8.1.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டு இயக்கத்தின் தலைவர் தெய்வசிகாமணி மற்றும் நிர்வாகிகள் சந்தித்தனர். இந்நிகழ்வின்போது, கழக பொருளாளர் டி.ஆர். பாலு, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.1.2026) சென்னை, பட்ரோடு நியாய விலைக் கடையில், பொங்கல் பரிசு தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு மற்றும் ரூ.3,000/– ரொக்கம் மற்றும் வேட்டி, சேலைகளை வழங்கி தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, அமைச்சர் மா.சுப்பிரமணியன், அடையாறு மண்டலம், சைதாப்பேட்டை, காமராஜபுரம் நியாய விலைக்கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3000/– ரொக்கம் மற்றும் விலையில்லா வேட்டி, சேலைகளை வழங்கினார். இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், அடையாறு மண்டலக் குழுத் தலைவர் ஆர்.துரைராஜ் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.






## பொன்னேரி – பாடியநல்லூரில் இன்று விழா!

# “உங்க கனவ சொல்லுங்க” எனும் புதிய திட்டம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

**சென்னை, ஜன.9–**

**திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுவரை, தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்கள் வரை பயன்பெறும் வகையில் பல்வேறு சமூக நலத் திட்டங்களை அறிவித்து வெற்றிகரமாக செயல்படுத்தி அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள்/ திட்டங்கள் அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்கி வருகிறது.**

நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருந்த மக்களின் தேவைகளான பட்டா மாறுதல், சாதி சான்றிதழ், வருவாய்த் துறை சான்றிதழ்கள், மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு அதற்கான பெயர் மாற்றங்கள், சாலை வசதிகள், தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகள் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின் கீழ் முகாம்கள் நடத்தப்பட்டு தீர்க்கப்பட்டுள்ளன.

மேலும், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, மகளிருக்கான விடியல் பயணத் திட்டம், மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டம், மாணவர்களுக்கு தமிழ்ப் புதல்வன் திட்டம், திறன் மேம்பாட்டிற்கான “நான் முதல்வன்” திட்டம், முதியோர்களுக்கு உயர்த்தப்பட்ட ஓய்வூதியம், பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், “நலம் காக்கும் ஸ்டாலின்” சிறப்பு மருத்துவ முகாம்கள், தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டம், முதியோர்களுக்கான அன்புச்சோலை திட்டம், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு வீடுகளுக்கே சென்று ரேஷன் பொருட்கள் வழங்கும் “முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்” போன்ற பல்வேறு திட்டங்களை இவ்வரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கடந்த ஐந்து ஆண்டுகளில் அமல்படுத்தப்பட்ட பல்வேறு அரசு திட்டங்களில் பயனடைந்துள்ள பயனாளிகளின் தரவுகள் மற்றும் விவரங்களை உறுதிப்படுத்தவும், திட்டங்களின் தற்போதைய செயல்பாட்டு நிலை குறித்து பொதுமக்களின் கருத்தினை அறியவும், மக்களின் எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகளைக் கண்டறியவும், அவர்களது வசிப்பிடங்களுக்கே சென்று நேரடியாக அறிந்து கொள்ளும் “உங்க கனவ சொல்லுங்க” என்ற திட்டத்தினை செயல்படுத்த முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

“உங்க கனவ சொல்லுங்க” திட்டத்தில், தமிழ்நாட்டில் உள்ள சுமார் 1.91 கோடி கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள குடும்பங்களை சந்தித்து, அவர்கள் பயன்பெற்ற திட்டங்கள் மற்றும் கனவுகளை 50,000 தன்னார்வலர்களை ஈடுபடுத்தி கண்டறிய எடுக்கப்படும் முன் மாதிரி முயற்சியாகும். இந்த களப்பணி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படும்.

இப்பணிக்காக மகளிர் சுய உதவி குழுக்களைச் சேர்ந்த சுமார் 50,000 உறுப்பினர்கள் தன்னார்வலர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இப்பணிகளை மேற்கொள்ள உரிய பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தெரிவிக்கும் கருத்துகளை பதிவு செய்ய தமிழ்நாடு மின்-ஆளுமை முகமை (TNeGA) மூலம் தனியாக கைபேசி செயலி இதற்கென உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் செயலாக்கம் குறித்த விவரங்கள் அனைத்து ஊரகம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளிலும், நாளிதழ்கள், சமூக ஊடகங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் முன்கூட்டியே முறையாக விளம்பரப்படுத்தப்பட்டு, விழிப்புணர்வு பணிகளை செய்தி மக்கள் தொடர்புத் துறை ஒருங்கிணைக்கும்.

தன்னார்வலர்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் இரண்டு முறை செல்வர். முதல் முறை வீட்டிற்கு செல்லும் போது விண்ணப்ப படிவத்தினை குடும்பத் தலைவர் / உறுப்பினரிடம் வழங்குவர். அவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள அரசு திட்டங்களின் பெயர் பட்டியல் விவரங்களை அவர்களிடம் தெரிவித்து, படிவத்தினை பூர்த்தி செய்து தரும்படி கோருவர்.

தன்னார்வலர்கள், இரண்டு நாட்களுக்குப் பிறகு ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தினை சரிபார்த்து கைபேசி செயலியில் பதிவேற்றம் செய்வர். கைபேசி செயலியில் பதிவேற்றியப் பின்னர் அக்குடும்பத்திற்கு தனித்துவமான அடையாள எண்ணுடன் கூடிய கனவு அட்டையினை வழங்குவர். இந்த அட்டை மூலம் WWW.UKS.TN.GOV.IN என்ற இணையதளத்தில் தங்களது கனவு / கோரிக்கையின் நிலை குறித்து தெரிந்துக் கொள்ளலாம்.

முதலமைச்சர் அவர்கள் “உங்க கனவ சொல்லுங்க” திட்டத்தினை இன்று (9.1.2026) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், பாடியநல்லூரில் தொடங்கி வைக்க உள்ளார்.

அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் அமைச்சர் பெருமக்களால் அன்றைய தினமே தொடங்கி வைக்கப்படும். இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு திட்டங்களின் பயனாளிகள், பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்கள் கலந்து கொள்வர்.

## சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா தலைமை! மு.இராசா எம்.சி – கே.கண்ணன் எம்.சி. முன்னிலை!

# விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் பொதுமக்களுக்கு பொங்கல் தொகுப்பு - புத்தாடை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் – தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. வழங்குகின்றனர்!

*சென்னை, ஜன. 09 -*

*சென்னை தெற்கு மாவட்டம், விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொதுமக்களுக்கு பொங்கல் தொகுப்பு மற்றும் புத்தாடை வழங்கும் விழா இன்று (09.01.2026 - வெள்ளிக்கிழமை) மாலை 4 மணிக்கு, ஏ.வி.எம். காலனி காமராஜர் சாலை பகுதியில் 460 நபர்களுக்கு, மாலை 6 மணிக்கு, அன்னை சத்யா நகர் பகுதியில் 1600 நபர்களுக்கு வழங்கப்படுகிறது.*

*இந்நிகழ்ச்சிக்கு விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா தலைமை வகிக்கிறார்.*

*பகுதிக் கழகச் செயலாளர்கள் மு.ராஜா எம்.சி, கே.கண்ணன் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இந்நிகழ்ச்சியில் சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி பொங்கல் தொகுப்பு மற்றும் புத்தாடை வழங்குகின்றனர்.*

*மேலும் இந்நிகழ்வில் கணக்கு நிலை குழு தலைவர் க.தனசேகரன், கழக வர்த்தக அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம், மண்டலக் குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, தொகுதி பார்வையாளர் வே.உமாகாந்த், மாவட்ட துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் உ.துரைராஜ், பி.எஸ். முருகேசன், எஸ்.டி.தங்கராஜ், மாமன்ற உறுப்பினர்கள் பொன்.வரலோகு, ரத்னா லோகேஸ்வரன் எம்.சி, நிளவரசி துரைராஜ், வட்டக் கழகச் செயலாளர்கள் கோவிந்தராஜன், வி.ஏ.ராஜா, பாஸ்கர் ஆர். பாபு, சதீஷ் கண்ணன், பி. கே.குமார், அ.கதிரேசன், பூக்கடை பழனிச்சாமி, இரா.செழியன், செந்தில்குமார், ஜம்பு முருகன் மற்றும் பகுதி இளைஞரணி அமைப்பாளர்கள் மணிகண்டன், சி. ஹெச்.தினேஷ் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*மேலும் இந்நிகழ்வில் மாவட்ட, பகுதி, வட்ட, பாக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*




திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி நகரம் ஸ்ரீசுப்ரமணியசுவாமி கூட்டுறவு பண்டக சாலை நியாய விலைக் கடையில் தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை முன்னிட்டு அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பரிசுத்தொகுப்பு மற்றும் ரூ.3000 ரொக்கத் தொகை ஆகியவற்றை மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் நகர செயலாளர் திருத்தணி வி.வினோத்குமார், நிர்வாகிகள் ஜி.எஸ்.கணேசன், கே.எஸ்.அசோக்குமார், ரேவதி சுரேஷ், மற்றும் கழக நிர்வாகிகள்.பலர் உள்ளனர்.